**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.</u>**

**முன்னிலை: திருமதி.பி.கே.தமயந்தி,எம்,ஏ.,பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

**2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 நாள் வியாழக்கிழமை**

**<u>இ.ம.எண். 7/2024 in அ.வ.எண். 267/2020</u>**

K. முருகேசன் . . . **மனுதாரர் /வாதி**

**//எதிராக//**

1. கண்காணிப்பு பொறியாளர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருச்செங்கோடுரோடு, நாமக்கல்.

2. உதவி செயற்பொறியாளர்,
இயக்கமும் பராமரிப்பும், தமிழ்நாடு மின்உற்பத்தி
மற்றும் பகிர்மான கழகம், எருமப்பட்டி, சேந்தமங்கலம்.

3. இளமின் பொறியாளர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அண்ணாநகர், நாமக்கல்.

4. பானுமதி . . . **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனுவானது என்முன்பு 13.03.2024 ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதிதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.V.ரகு, அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்தரப்பில் கற்றறிந்த அரசுதரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 4 ம்எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதி தோன்றாதரப்பினராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்/வாதிதரப்பில், அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக தாவாவில் மனுதாரர்கள் கட்சியை நிரூபணம் செய்ய மாவட்ட ஆட்சியருக்கு சம்மன் அனுப்பி மனுவில் கண்ட ஆவணங்களை ஒப்புவித்து சாட்சி சொல்ல அனுமதி வழுங்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/வாதிதரப்பு பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:–**

மனுதாரர்/வாதிதரப்பில் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரக்கையில், மனுதாரர் அசல்தாவாவில் வாதி. எதிர்மனுதாரர்கள்பேரில் செயல்உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார். தற்போது தாவாவில் வருவாய் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டியுள்ளது. அவைகள் மனுதாரரின் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் ஆகும். மனுவில் கண்ட ஆவணங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ளதாக தெரியவருகிறது. அதனால் மாவட்ட ஆட்சியருக்கு சம்மன் அனுப்பி மேற்படி ஆவணங்களை ஒப்புவித்து சாட்சிசொல்ல வேண்டியுள்ளது. இல்லாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். அதனால் இம்மனு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆகவே மேற்படி தாவாவில் மனுதாரர்/வாதிதரப்பு கட்சியை நிரூபணம் செய்ய மாவட்ட ஆட்சியருக்கு சம்மன் அனுப்பி மனுவில் கண்ட ஆவணங்களை ஒப்புவித்து சாட்சி சொல்ல அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 3ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதிதரப்பு எதிர்மனுஉரையின் சுருக்கம்:– (1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தம்முடையதாக பாவித்துக்கொண்டுள்ளார்கள்)**

3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிதரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனுஉரையில், மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள வருவாய் ஆவணங்கள் எதற்காக தேவைப்படுகிறது

என்பதை சமூகம் நீதிமன்றத்திற்கு தெளிவுபட நிரூபணம் செய்யவில்லை. மேலும் சர்வேஎண்.7/5 மற்றும் 7/4 எண்களுக்கான 1960ம் ஆண்டின் 'அ' பதிவேடு எதற்காக இவ்வழக்கில் குறியீடு செய்ய வேண்டியுள்ளது என்று கூறாமல் வெறுமனவே தாவாவில் வருவாய் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியுள்ளது என்று மட்டும் கூறி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் கோரியுள்ள சர்வேஎண்.7/5 மற்றும் 7/4 சர்வேஎண்களுக்கான பட்டா, சிட்டா, அடங்கல், புலவரைபடமானது கிராமநிர்வாக அலுவலரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு இருக்க மனுதாரர் மேற்கண்ட சர்வே எண்களிலுள்ள பட்டா, சிட்டா, அடங்கல், புலவரைபடங்களை மாவட்ட ஆட்சியரிடம் கேட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட ஆவணங்களானது எந்த வருடத்திய ஆவணம் என்பதை மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. மேலும் மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் வழக்கு விசாரணைக்கு தேவையற்ற ஒன்றாகும். வழக்கு நடவடிக்கைகளை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்டஎண்ணத்தில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்கள் மேற்படி வழக்கு விசாரணைக்கு எவ்வகையில் தொடர்புடைய ஆவணங்கள் என்று விளக்கமாக கூறாமல் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது சட்டப்படி நிலைக்கக்கூடியதல்ல. மேலும் மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் சர்வேஎண்.7/4 க்கும் அசல் தாவா வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது. தாவா சொத்துவிவரத்தில் இல்லாத சர்வே எண்களுக்கு அதனுடைய ஆவணங்களை கொண்டுவந்து சாட்சியமளிக்க சட்டப்படி கோர இயலாது. மேற்கண்ட காரணத்திற்காக மேற்படி மனுவானது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடியாக வேண்டிய ஒன்றாகும்.

மேலும் இப்பிரதிவாதிக்கு வீண் கஷ்ட, நஷ்டத்தை கொடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தின் பேரில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மனுப்படி பரிகாரம் கிடைக்க நியாயமோ, சட்ட ஆதாரமோ இல்லை. ஆகவே மனுதாரரின் இந்த மனுவை செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

4. இம்மனுவில் இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியது என்னவென்றால் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. வழக்காவணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, அசல் வழக்கானது கடந்த 31.10.2017 ம் தேதியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதிதரப்பில் தாவா சொத்துக்கு வாதி பெயரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் பூந்தோட்டட மின்இணைப்பு வழங்க 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் செயல் உறுத்துக்கட்டளை டிகிரி பிறப்பிக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் கடந்த 16.09.2019 தேதியில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, வாதிதரப்பு இதரசாட்சிகள் விசாரணைக்காக வாய்தா வைக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த 29.01.2024 தேதியில் மனுதாரர்/வாதிதரப்பில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/ வாதிதரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், பாலப்பட்டி மிட்டா கிராமம் ச.எண்.7/4, 7/5 ஆகிய நிலங்களுக்கு சம்மந்தப்பட்ட 1960,

1987ம் ஆண்டிற்குரிய 'அ' பதிவேடுகள் பட்டா, சிட்டா, அடங்கல், புலவரைபடம் ஆகியவைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து மாவட்டஆட்சியர், நாமக்கல் மாவட்டம் சாட்சிசொல்ல வேண்டும் என அனுமதிகோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதியின் அசல்வழக்கு பிராதை ஆராய்ந்து பார்க்கும்போது, மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள சம்மனில் 1960, 1987ம் ஆண்டிற்குரிய வருவாய்த்துறை ஆவணங்களைப்பற்றி பிராதுசங்கதிகளில் கூறப்படவில்லை. மனுதாரர் அசல்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் 2014ம் ஆண்டிலிருந்து 2017ம் ஆண்டுவரைக்குமான ஆவணங்களைதான் தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் இவ்வழக்கிற்கு மேற்படி ஆவணங்கள் மனுதாரர்தரப்பு என்ன சங்கதிகளை நிரூபிப்பதற்காக அவசியமானது என்ற விவரம் மனுதாரரின் மனுவில் கூறப்படவில்லை. எவ்வகையில் மனுதாரரின் வழக்கிற்கு சம்மனில் கண்டுள்ள ஆவணங்கள் முக்கியமான ஆவணங்கள் என்பதும் விளக்கமாக எடுத்துரைக்கப்படவில்லை.

**6.** மேலும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்தரப்பில் ச.எண்.7/5 மற்றும் 7/4 எண்களுக்கான 1960ம் ஆண்டின் 'அ'பதிவேடு எதற்காக இவ்வழக்கில் குறியீடு செய்ய வேண்டியுள்ளது என்று கூறாமல் வெறுமையாக வருவாய் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியுள்ளது என்று மனுதாரர்தரப்பில் மனு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்று வாதிடப்பட்டது இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது. மேலும் வழக்கு நடவடிக்கைகளை இழுத்தடிக்க வேண்டும் என்று கெட்ட எண்ணத்தில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக

எதிர்மனுதாரர்கள்தரப்பில் வாதிடப்பட்டது இந்நீதிமன்றம் பரிசீலிக்கும் வகையில் உள்ளது. மேலும் ச.எண்.7/4 க்கும் அசல்வழக்கு சொத்துக்கும் எந்தசம்மந்தமும் இல்லை என்ற எதிர்மனுதாரர்கள்தரப்பு வாதம் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுவுடன் தாக்கல் செய்துள்ள சம்மனில் கண்டுள்ள ஆவணங்களைப் பொறுத்து எந்தவித சங்கதிகளும் அசல் வழக்கு பிராதில் கூறப்படாத நிலையில் மேற்படி ஆவணங்களை ஒப்படைத்து சாட்சியமளிக்க கோரும் மனுதாரரின் மனுவில் தகுநிலை இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே மனுதாரின் மனுவை அனுமதிக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரரின் மனுவை செலவுதொகையுடன் தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 2024ம் வருடம் மார்ச் மாதம் 28ம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.03.28 20:13:06 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

1. <u>மனுதாரர்/வாதிதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u>
இல்லை.

2. <u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u>
இல்லை.

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.03.28 20:13:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சேந்தமங்கலம்.